விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 296 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 24 புதன்கிழமை (11.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முல்லை சட்டத்தரணிகளின் பணிப் புறக்கணிப்பு நிறைவு

### கறுப்பு முகக்கவசத்துடன் பணியில் ஈடுபடுவர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட காலவரையறையின்றிய தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

எனினும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில், கறுப்பு முகக்கவசம் அணிந்தவாறு பணியில் ஈடுபடுவர்.

(ம-7)

## தமிழர்கள் விடயத்தில் இந்தியா கரிசனையுடன் செயற்பட வேண்டும்

### மாலதியின் நினைவு நாளில் சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா எப்பொழுதும் கரிசனையோடு செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

16

### சீனக் கப்பலை நாட்டுக்கு அனுமதித்த நிலையில்

# ஜெய்சங்கர் நேற்று இலங்கை வந்தார்



- அரசியல் ரீதியில் அழுத்தம் கொடுக்கப்படலாம்.
- முக்கிய அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்.
- இலங்கை - இந்தியா இடையே இன்று முக்கிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## துரித வளர்ச்சிக்கு இலங்கை செல்லும்

### ஜனாதிபதி ரணில்

(கண்டி)

இலங்கையை துரித பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்வேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) கண்டி கிளையை நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில்

16

### 32 வருடங்களுக்குப் பின்

## மூவருக்கு நீதிமன்றால் மரண தண்டனை

(கொழும்பு)

32 வருடங்களுக்கு பின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு களுத்துறை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன மற்றுமொரு நபருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்

15

## தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல

### நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

தேர்தல்முறை மாற்றத்தின் ஊடாக தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல்முறை மாற்றம் தொடர்பிலான யோசனை ஒன்றை

15

## வவுனியாவில் விபத்து; குடும்பப் பெண் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா, பம்பைமடுவில் மோட்டார் சைக்கிள் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, பம்பை மடு இராணுவ முகாமிற்கருகில் நேற்றுக் காலை இந்த

15

## விலகியவர்கள் இணையலாம்

### நாமல் எம்.பி

(கொழும்பு)

"தங்கள் கட்சியின் கதவு எப்போதும் திறந்திருக்கின்றது என்றும், கட்சியை விட்டு சென்றவர்கள் மீண்டும் வர விரும்பினால் மீண்டும் தங்களுடன் இணைந்து கொள்ளலாம்" என்றும்

15

## சிமெந்தின் விலையை உயர்த்த யோசனை

(கொழும்பு)

சிமெந்தின் விலையை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிமெந்து இறக்குமதி நிறுவனங்கள் விலையை அதிகரிக்கச் செய்யப்படுவதாகவும் அதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றத்தின் தலைவரும் தேசிய நிர்மாண சங்கத்தின் முன்னாள் தலை

15

## மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைவாக இம்மாதம் முதல்மின்கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் முதலீநடைமுறைக்கு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி தலைமையில் சபாநாயகரின் பிறந்தநாள்



(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியின் போது கேக் வெட்டி பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானி சமன் ஏக்க நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## ஆசையில் திருட முற்பட்டவர் மக்களால் மடக்கிப் பிடிப்பு இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் ஆலை ஒன்றில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் பொது மக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இணுவில் பகுதியில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றில் நேற்று முன்தினம் குறிப்பிட்ட தொகை பணம் களவு போயுள்ளது

இந் நிலையில் நேற்று இரவு ஆலைப் பகுதியில் குறித்த நபர் திருட முற்பட்டவேளை அப் பகுதி பொதுமக்கள் குறித்த நபரை மடக்கி பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-7)

# அனைத்து மாணவர்களுக்கும் மீண்டும் மதிய உணவுத் திட்டம்

## முல்லையில் கல்வி அமைச்சர்



(முல்லைத்தீவு)

எதிர்காலத்தில் பாடசாலை சீருடை மற்றும் மதிய உணவு போன்ற கொடுப்பனவுகள் முறையாக அதிகரிக்கப்படும் எனவும், 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு இலவசமாக வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மல்லாவியிலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற விவசாயக் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தினூடாக பாடசாலைகளில் அத்தியாவசிய மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

2030 ஆம் ஆண்டளவில் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை மதிய உணவு இலவசமாக வழங்கப்படும். இலவச மதிய உணவுக்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருவதோடு பிரான்ஸ் அரசாங்கத்துடனும் தொடர்புடைய கட்சிகளுடனும் இது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவை அனைத்திற்கும் மத்தியில், குழந்தைகளின் கல்வி தடையின்றி பேணப்பட வேண்டும் என்றும், நிலையான கல்வித் திட்டத்தைத் தொடர அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும், போர் மோதல்கள், காலநிலை மாற்றம் போன்ற அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து இந்தக் கல்வி சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (ம-7)

## நசீர் அஹமதின் எம்.பி பதவி வெற்றிடம் என அறிவிப்பு

(கொழும்பு)


உயர் நீதிமன்ற தீர்ப்பினை அடுத்து சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமதின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ஏ. ரோஹனதீர உத்தியோகபூர்வமாக தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளார்.

இக்கடிதத்திற்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தீர்மானமொன்றினை மேற்கொண்ட பின்னர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட விருப்பு வாக்குப்பட்டியலில் அடுத்ததாக உள்ள நபரின் பெயர் விரைவில் பாராளுமன்ற உறுப்பினராக வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி சின்னதங்கம் தியாகராஜா



மண்ணில் 21.06.1934

விண்ணில் 10.10.2023

கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னதங்கம் தியாகராஜா அவர்கள் நேற்று (10.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு தியாகராஜா அவர்களின் அன்பு மனைவியும் தங்கவேல் (நிர்வாகி - கேம்பிறிஜ் கலாசாலை) அமரர்களான கந்தசாமி, நடராஜா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் சகுந்தலாதேவி, சபாரத்தினம், சரோஜாதேவி, நவரட்ணம், சாரதாதேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைசிங்கம், விமலாதேவி, ரவீந்திரன், விஜிதா, அரிபூரணநாதன், பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மகிஜா, வேணுஜா, திவியா, நிதுசன், மிதுஜன், தனுசன், கரிசன், சபிதா, இலக்சியா, வினுசா, ஜனுசன், நேருஜன், கீர்த்தனன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் தன்சிகா, வருணிஷ், நிவிஷ்னா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.10.2023 நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி இல.
சி.தங்கவேல் 077 595 4765
(நிர்வாகி, கேம்பிறிஜ் கலாசாலை)
செ.துரைசிங்கம் 077 664 9020
(முன்னாள் நில அளவை அத்தியட்சகர்)

தகவல்: குடும்பத்தினர்

(C-7411)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம்

(கொழும்பு)

**தேசிய மின்சார அமைப்பிற்கு தினசரி 6.5சதவீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

தேசிய மின்சார அமைப்பிற்கு தினமும் 6.5 சதவீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் சூரியசக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் எனக் கூறப்படுகின்றது.

இது குறித்து தனியார் சூரியப்படல நிறுவனம் ஒன்றின் தலைவர் ஜயந்த சமரகோன் கருத்துத் தெரிவிக்கையில்,

"வடமாகாணத்தில் பூநகரி ஏரியை அண்மித்த பகுதிகளில் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கமைவாக 1000 ஏக்கரில் 700 மெகாவால்ட் சூரியசக்தி மின் அமைப்பு நிறுவப்படவுள்ளதோடு, சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பூநகரி ஏரியை முழுமையாக அபிவிருத்தி செய்து அப்பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் 5 பில்லியன் ரூபாவினை செலவிடவுள்ளதாகவும் இத்திட்டத்தின் மூலம் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சார அமைப்பில் சேர்க்கப்படுவதால் அப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள் என்று கூறப்படுகின்றது. (5-6)

# இலங்கைக்கு வரவுள்ள சர்வதேச நாணயநிதியக்குழு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் மற்றுமொரு குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த குழு இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது தவணை குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் வரிக் கொள்கை மற்றும் பிற பொருளாதாரக் காரணிகள் குறித்து இந்த கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டம் நேற்று இரண்டாவது நாளாக மொரோக்கோவின் மராகேஷில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர். (5-6)

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடமிருந்து ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

கர்தினால் தொடர்பில் குறிப்பிடப்படும் எந்தவொரு கருத்தும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

ஜேர்மன் தொலைக்காட்சியொன்றுக்கு ஜனாதிபதி வழங்கிய அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை கத்தோலிக்க ஆயர்களால் பேரவை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதிக்கு குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர் பேரவையுடனேயே தமது கொடுக்கல் - வாங்கல் உள்ளதாகவும் கர்தினாலுடன் அல்லவெனவும் ஜனாதிபதி கூறியதை கவனத்திற்கொண்டு கத்தோலிக்க ஆயர்கள் பேரவையால் ஜனாதிபதிக்கு குறித்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# சீனக்கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கை வரவுள்ளது

## வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

சீன புவி இயற்பியல், அறிவியல் ஆய்வுக் கப்பலான "Shi Yan 6" என்ற சீனக் கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம் நாட்டுக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.


தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

"Shi Yan 6" ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி இலங்கையில் நங்கூரமிடுவதாக இலங்கை கடற்படையினர் முன்னர் உறுதிப்படுத்தியிருந்த போதிலும், இறுதி நேரத்தில் இலங்கை அதிகாரிகளால் இராஜதந்திர மட்டத்தில் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (5-6)

# விமானத்துறை ஊடாக ரூ.22 பில்லியன் இலாபம்

## நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

சேவை வழங்கல் ஊடாக நாட்டின் விமானத்துறை கடந்த ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில், 22 பில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அமைச்சர், அதில் சுமார் 10 பில்லியன் ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை 200 விமானப் போக்குவரத்து சேவைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விமான சேவைகளை வழங்குவதன் மூலம் இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 22 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (5-6)

# சீரற்ற காலநிலையால் ஆயிரம் குடும்பங்கள் இடப்பெயர்வு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட சுமார் 1,000 குடும்பங்களைச் சேர்ந்த 3,455 பேர் தற்போது தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடு முழுவதும் அண்மைய நாட்களில் சீரற்ற காலநிலை காரணமாக 15 மாவட்டங்களில் 46,000 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் 12,722 குடும்பங்களைச் சேர்ந்த 46,060 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

24,403 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெள்ளத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியாக மாத்தறை மாவட்டம் பதிவாகியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# வரி செலுத்தத் தவறிய செல்வந்தர்களுக்கு சிக்கல்

(கொழும்பு)

வரி செலுத்தாத செல்வந்தர்களை வரி வலையில் சிக்க வைப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொலிஸாரிடம் இருந்து தகவல்களைப் பெறவுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைக்கு அமைய 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி மற்றும் சர்ச்சைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த நிதித் தரவுகளை திணைக்களத்துக்கு பொலிஸார் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் மூலம், நபர்களின் சொத்துக்கள் மற்றும் அவர்கள் எப்படி சம்பாதித்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தவும் வரி வலையில் சிக்கியவர்களிடமிருந்து வரிகளை வசூலிக்கவும் உதவும் என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையில் கதிரியக்க ஸ்கான் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சி.ரி ஸ்கான் சேவை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது என அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்பான நிறுவனத்துடனான சேவை ஒப்பந்தம் கடந்த இரண்டு வருடங்களாக புதுப்பிக்கப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொது மக்கள், சிறுவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து சில நாட்களில் இயந்திரத்தினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டேவிட் மலான் அபார சதம்
# பங்களாதேஷை வீழ்த்தியது இங்கிலாந்து



டேவிட் மலானின் அபார சதத்துடன் பங்களாதேஷை வீழ்த்தி 137 ரன்களால் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இமாசலப்பிரதேசத்தின் தர்மசாலாவில் 7வது லீக் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இங்கிலாந்து, பங்காளதேஷ் ஆகிய அணிகள் மோதின. டாஸ் வென்ற பங்காளதேஷ் பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 364 ரன்கள் குவித்தது. டேவிட் மலான் 107 பந்தில் 5 சிக்சர், 16 பவுண்டரி உட்பட 140 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். ஜோ ரூட் 68 பந்தில் ஒரு சிக்சர், 8 பவுண்டரி உட்பட 82 ரன்கள் சேர்த்தார்.

பங்காளதேஷ் சார்பில் மெஹிதி ஹசன் 4 விக்கெட்டும், ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.




இதையடுத்து, 365 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்காளதேஷ் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் லிட்டன் தாஸ் பொறுப்புடன் ஆடி 76 ரன்னில் அவுட்டானார். முஷ்பிகுர் ரஹிம் 51 ரன்னில் வெளியேறினார். ஹிருடோய் 39 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், பங்காளதேஷ் 227 ரன்னுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 137 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இங்கிலாந்து சார்பில் ரீஸ் டாப்ளே 4 விக்கெட்டும், கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். (ம-7)




## இலங்கையை வென்றது பாகிஸ்தான்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ணத் தொடரின் 8ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.




போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ் 122 ஓட்டங்களையும், சதீர சமரவிக்ரம 108 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

குசல் மெண்டிஸ் 65 பந்துகளில் சதத்தை பூர்த்திசெய்தார்.

இந்தநிலையில் நேற்றைய போட்டியில் உபாதைக்கு உள் ளான குசல் மெண்டிஸ் வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.




அத்துடன் சதீர சமரவிக்ரம விக்கட்கப்பாளராக செயற்பட்டார்.

இந்தநிலையில் 345 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கட்டுகளை இழந்து 345 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

(ம-7)

# 20 வயது பிரிவு கால்பந்தாட்டம்
# சென்.பற்றிக்ஸ் சம்பியன்



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட போட்டியில் 20 வயது பிரிவில் வரலாற்று சாதனை படைத்தது சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு ஷாகிராக் கல்லூரிக்கும் இடையிலான இறுதியாட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தேசிய ரீதியில் பலம் வாய்ந்த கொழும்பு ஷாகிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 4 : 3 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அகில இலங்கை 20 வயதுப் பிரிவில் சம்பியனானது.

2022 , 2023 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் 20 வயதுப் பிரிவில் கால்பந்தாட்டத்தில் சம்பியனான ஒரே பாடசாலை சென். பற்றிக்ஸ் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அணி தனது முதலாவது போட்டியில் அனுராதபுரம் நச்சடுவா முஸ்லிம் மகா வித்தியாலயத்தை 7 : 0 என்ற கோல் கணக்கிலும், இரண்டாவது போட்டியில் கடயமுட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியை 3 : 1 என்ற கோல் கணக்கிலும், கால் இறுதியாட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பலம் பொருந்திய மட்டக்களப்பு ஏறாவூர் அலிஹார் தேசிய பாடசாலையை 2 : 0 என்ற கோல் அடிப்படையிலும், அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 1 : 0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று, இறுதிப் போட்டியில் கொழும்பு ஷாகிராக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு (Penalty) உதைமூலம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் வயதுப் பிரிவினர் 2018 ஆம் ஆண்டில் 16 வயதுப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் கால்பந்தாட்டத்தில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த அணி என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன பெரமுன களமிறக்கும் வேட்பாளரே அரியணை ஏறுவார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன களமிறக்கும் வேட்பாளரே வெற்றியடைவார் என அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

யார் அந்த வேட்பாளர் என்று உரிய நேரத்தில் அறிவிக்கப்ப டும் என குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வீழ்ந்து போகவில்லை. எமது கட்சி இன்னமும் வீரியத் துடன் இருக்கின்றது. ஆனால், கட்சியின் தலைமைத்துவத் தில் நிச்சயம் மாற்றம் வரும். எந்நாளும் எம்மால் அப்பத வியில் இருக்க முடியாது. புதிய வர்கள் மற்றும் இளைஞர்கள் தலைமையேற்க முன்வர வேண் டும்.


ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. உரிய நேரத் தில் அறிவிப்பு விடுக்கப்படும். எமது கட்சி களமிறக்கும் வேட் பாளரே வெற்றியடைவார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் கூறுவது போல் தான் இந்த அரசு செயற்பட வேண் டும் என அவசியம் இல்லை என தெரிவித்தார். (5-6)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். செல்லத்துரை நடேசபிள்ளை

தோற்றம்: 21.03.1936 | மறைவு: 26.09.2019



எங்கள் குலம் காக்கவந்த தெய்வமே அப்பா!
நீங்கள் இறைவனடி சேர்ந்து இன்றுடன்
நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டதப்பா!
நான்கு ஆண்டுகள் ஆனாலும் நாலாயிரம்
ஆண்டுகள் ஆனாலும் எங்கள் உள்ளங்களில்
வீற்றிருந்து தெய்வத்துடன் ஒன்றெனக்
கலந்துவிட்டீர்கள் அப்பா!
நீங்கள் உங்கள் குலதெய்வமான இனிச்ச
புளியடி முருகப்பெருமானின் பாதத்தில் இருந்து
எங்களை ஆசீர்வதியுங்கள் அப்பா!

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(1739)

# இராசிபலன்

11.10.2023
புரட்டாதி 24, புதன்கிழமை
துவாதசி முன்னிரவு 6.51 மணிவரை
மகம் முற்பகல் 10.52 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சித்தாமிர்தம்,
சந்நியஸ்த மாளயம்.

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்.

**வளவன்**




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபடுவது நல்லது.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும்.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பாதகங்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்துமுடிப்பீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், இழுபடியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனதில் தேவையற்ற சம்பவங்களைத் தவிர்ப்பது நல்லது.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.




கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், உடல்நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், பொதுவாழ்வில் கௌரவம் அந்த-ஸ்து உயரும் வாய்ப்புண்டு.

தீயோரை மதித்து நட்பு [illegible] பெருத்த இழப்புக்கு ஆளாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நடைபவனி நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ்ரத்னா விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசைநாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக்கலை(தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம், போன்றன), கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை) , கிராமியக்கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), இசைக்கலை(வாய்ப்பாட்டு, பண்ணிசை,இசையமைப்பு), ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக்கலைத்துறைகளுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர்களும் இதுவரை இவ்விருதினை பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் எதிர்வரும் 15.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (5-6)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேசகலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசைநாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன), கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை, கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம்,மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்) இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை,இசையமைப்பு ) ஒப்பனைக் கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைகளுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் கலைப் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஏற்கனவே இளம் கலைஞருக்கான கலைத்துறைச் சான்றிதழ் மற்றும் இளங்கலைஞர் விருது பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத் துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் எதிர்வரும் 15.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (5-6)

# பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை பொதுச் சந்தைக்குள் இரவு வேளை அத்துமீறி நுழைந்த குழு ஒன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தி மிரட்டி விட்டுச் சென்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு சங்கானை பொதுச்சந்தையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு இருந்தவர்கள் மீது அங்கு போதையில் வந்த நபர்கள் அவர்களுக்கு இடையூறு விளைவித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து அயலில் இருந்து வந்தவர்களை அடுத்து குறித்த நபர்கள் தப்பித்து ஓடிவிட்டனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6)

## அஞ்சல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாத்தினை முன்னிட்டு யாழ். பொதுசன நூலகம் நடத்தும் அஞ்சல் கண்காட்சி யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நூலக கேட்போர் கூட மண்டபத்தில் நாளைய தினம் மு.ப 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி திருமதி.மதுமதி வசந்த குமார், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கெ.செந்தில்குமரன் மற்றும் யாழ்.பொதுசன நூலக பிரதம நூலகர் திருமதி.அனுஷியா சிவகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வானது நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, கதிர்காம சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறவுள்ளது.

27 ஆம் திகதி பகல் 1006 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை திருக்கல்யாணமும் மறுநாள் 28 ஆம் திகதி சனிக்கிழமை சுவாமி இரவு வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (5-6)

## பீடி இலைகள் மீட்பு

(கொழும்பு)

கற்பிட்டி - மாம்புரி பிரதேசத்தில் இருந்து குளிப்பாட்டிக்கு லொறி ஒன்றின் மூலம் தும்புத்தூள் என்ற போர்வையில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட சுமார் 2 கோடிக்கும் அதிக பெறுமதியான பீடி இலைகளை கைப்பற்றியுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சந்தேகத்தின் பெயரில் குறித்த லொறியின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (5-6)

# யாழ் பாடி-08 மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள யாழ் பாடி- 08 பிரதேச மலரானது ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளிவரவுள்ளது.

இம் மலருக்கு கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், நாடக எழுத்துரு, ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மிகம், வரலாறு) சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புக்களில் ஆக்கங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்கங்களாக அமைய வேண்டும். கையெழுத்து பிரதியாகவோ அல்லது கணனியில் தட்டச்சு பதிப்பாகவோ சமர்ப்பிக்க முடியும். கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் ஏ4 தாளில் இருபக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும்.

சுயபடைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் ஆகாது. மலர்க்குழுவின் தீர்மானத்துக்கமைய தரமான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடிதவுறையின் இடது பக்க மூலையில் "யாழ் பாடி-08 பிரதேச மலர்" எனக்குறிப்பிட்டு ஆக்கங்களுடன் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 15.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 160 | 150 |
| கோவா | 200 | 180 | 150 | 200 |
| கரட் | 200 | 300 | 250 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 240 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 600 |
| வெண்டக்காய் | 120 | 140 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 280 | 150 | 250 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 | 150 |
| பீற்றூட் | 120 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 380 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 100 | 100 |
| போஞ்சி | 450 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 400 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 480 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 120 | 100 | -- | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10.2023-25.04.2025

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சிம்ம இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் இந்த இடங்களில் இருந்தபடியே, குறிப்பிட்ட நட்சத்திர பாதசாரங்களில் வலம் வந்தபடி ராகுவும், கேதுவும் பலன் தரப் போகிறார்கள். அஷ்டமத்து ராகு அலைச்சலைக் கொடுக்குமே தவிர, ஆதாயம் குறைவாகவே இருக்கும்.

ராகு பகவான் வரப்போவது 8 ஆம் இடம் என்பதால், உங்களுக்குள் ஒரு பய உணர்வு ஏற்படலாம். ஆனால் "மறைந்த ராகு நிறைந்த தனலாபம் தரும்" என்பது ஜோதிட மொழி. எனவே பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படாது. ஆனால் வருவாய் வருவதற்கு முன்பாகவே, செலவுகள் வரிசை கட்டி காத்துக் கொண்டிருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் மாற்றங் களைச் சந்திப்பீர்கள்.

2 இல் கேது சஞ்சரிப்பதால் தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டேயிருக்கும். என்றாலும் மன நிம்மதி குறையும். குடும்ப விடயங்களை மூன்றாம் நபரிடம் பகிர வேண்டாம். ஊர் மாற்றம், வாகன மாற்றம் ஏற்படலாம். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரப் பணி மாற்றம் வந்துசேரும். பதவி உயர்வை முன்னிட்டு, ஒரு சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று பணிபுரிய நேரிடும்.

**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9. 2024 முதல் 24.10.2023 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிர இயக்கத்தில் இருக்கும்பொழுது நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். நிலம், வீடுகளை விற்கும் சூழல் உருவாகும். உத்தியோகத்தில் நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும், 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்பராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். இவரது வக்கிர காலத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். கோபத்தைக் குறைப்பதன் மூலம், விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். இக் காலத்தில் உங்களுக்கு கண்டகச் சனியின் ஆதிக்கம் ஏற்படுகிறது. எனவே தடைகளும், தாமதங்களும் தானாகவே வந்து சேரும். கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் மருத்துவச் செலவு கூடும். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தால் பிரச்சினைகளை தவிர்க்கலாம்.




**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அங்கிருந்து உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அந்த இடங்களுக்கு ஏற்ற வகையில் பல நல்ல மாற்றங்கள் வந்து சேரும்.

வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும். சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

ராகு-கேது பெயர்ச்சியால் மனக் கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும், அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வந்து சேரும்.

## தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும்!

**வளர்ச்சி தரும் வழிபாடு**

8 ஆம் இடத்து ராகுவால் இனிய பலன் கிடைக்கவும், 2 ஆம் இடத்து கேதுவால் வருமானம் திருப்திகரமாக அமையவும், இல்லத்து பூஜையறையில் லட்சுமியை வைத்து வழிபட்டு வாருங்கள்.



கன்னி இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 7 ஆம் இடத்திற்கு வருகிறார். அதே நேரம் ஜென்ம இராசிக்கு கேது வருகிறார். இதனால் சர்ப்ப தோஷ ஆதிக்கத்தில் இருக்கிறீர்கள். ராகுவும், கேதுவும் மேற் கண்ட இடங்களில் அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு வீற்றிருந்து, நட்சத்திர பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவானால், குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். இருந்தாலும் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் தளரவிட வேண்டாம். 7 ஆம் இடம் என்பது களத்திர ஸ்தானமாகும். அங்கு ராகு சஞ்சரிப்பதால், திருமணவயதை அடைந்த ஆண், பெண்களுக்கு திருமணப் பேச்சுவார்த்தை நடைபெறும். ஆனால் அவ்வளவு சுலபத்தில் திருமணம் முடிவாகாது.

ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பதால் சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். உறவினர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சமூகப் பற்று மிக்க உங்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். அடிக்கடி உடல்நலக் குறைபாடு ஏற்பட்டு உற்சாகத்தைக் குறைக்கும். ஆகையால் கவனமாக செயற்படுங்கள். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் சகஜநிலைக்கு வரலாம்.

**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும், 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். இந்த வக்கிர காலம் உங்களுக்கு சிறப்பாக அமையும். இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு. ஒரு சிலர் வீடு கட்டி குடியேறுவார்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும், 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனிவக்கிரம் பெறுகிறார். இவரது வக்கிர காலத்தில் வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். "வெளி நாட்டு அழைப்புகளை ஏற்பது பற்றி யோசிப்பீர்கள். பெற்றோரின் அனுபவம் புதிய ஆற்றலை வழங்கும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். அவர் ஜீவன ஸ்தானத்திற்கு செல்வதால், பணி நிரந்தரம் ஏற்படும். தடைகள் ஒவ்வொன்றாக விலகும். "விபரீத ராஜயோக" அடிப்படையில் எதிர்பாராத திருப்பங்கள் வந்து சேரும். பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு, புதிய பங்குதாரர் களை இணைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைத்து மகிழ்ச்சி தரும். பிள்ளைகளின் மேற்படிப்பு, திருமணம் தொடர்பான முயற்சி வெற்றியாகும்.




**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு பகவான் செல்கிறார். அங்கிருந்து உங்கள் இராசியையும் 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். குருவின் பார்வையால் இதுவரை நிலவிய குழப்பங்கள் அகலும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடும். பிள்ளைகளின் கல்வி, கல்யாணம் போன்ற முயற்சியில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சி உங்களுக்கு அதிக விரயத்தைக் கொடுக்கும். நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை, யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது.

## பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சப்தம ராகுவால் சந்தோஷம் கிடைக்கவும், ஜென்ம கேதுவால் சிறப்புகள் காணவும் வெள்ளிக்கிழமைதோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபடுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# விரைவில் ரஷ்யாவின் உதவியை நாடவுள்ள பாலஸ்தீன ஜனாதிபதி



(மொஸ்கோ)

இஸ்ரேல் போரின் திடீர் திருப்பமாக பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ரஷ்யா செல்லவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று காலை யாருமே எதிர் பாராத வகையில் திடீரென பாலஸ்தீன ஹமாஸ் படைகள் இஸ்ரேல் மீது தாக்குதலை ஆரம்பித்தது.

இருபதே நிமிடங்களில் சரமாரியாக 5000 ஏவுகணைகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேலும் தாக்குதலை ஆரம்பித்தது. ஹமாஸின் காசா பகுதிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியது.

இதனால் இரு பகுதிகளிலும் பெரும் பரபரப்பு நிலையே நிலவி வந்த நிலையில், காசா பகுதியினை இஸ்ரேல் இராணுவம் முற்றுகையிட்டுள்ளது.

இப்படி பதற்ற நிலை தொடரும் நிலையில், பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் திடீரென ரஷ்ய தலைநகரான மொஸ்கோவுக்கு செல்ல உள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"பாலஸ்தீன ஜனாதிபதி ரஷ்யா செல்லவுள்ளதாக தகவல் வெளியாகி இருப்பினும், இந்தப் பயணம் எப்போது என்பது குறித்து ரஷ்யத் தரப்பில் இருந்து இதுவரையில் உத்தியோக பூர்வமான அறிவிப்புகள் இன்னமும் வெளிவராமல் இருக்கிறது.

ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் இந்த பயணத்தில் இந்தப் போர் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது" என இந்த தகவல் குறித்து பாலஸ்தீன தூதுதர் அப்துல் ஹபீஸ் நோஃபல் தகவல் வழங்கியுள்ளார்.

காசா பகுதியை இஸ்ரேல் இராணுவப் படைகள் முற்றுகையிட்டிருப்பதால் அங்கே எரிபொருள், தண்ணீர் மற்றும் உணவுகளுக்கும் கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நேரத்தில் பாலஸ்தீன ஜனாதிபதி ரஷ்யா செல்லவுள்ள விடயம் இந்த போரின் திருப்புமுனையாக கருதப்படுகிறது. (5-6)

# இஸ்[...]

# தூக்கில்[...]

## குண்டு மழை[...]

(காசா)

**முன்னெச்சரிக்[...] வசிப்பிடங்கள் மீது[...] பணயக் கைதிக[...] தூக்கிலிடுவோம் [...] எச்சரித்துள்ளது.**

இஸ்ரேலின் தீவிரமான குண்டு வீச்சு மற்றும் பொது மக்களை எச்சரிக்காமல் அவர்களின் வசிப்பிடங்கள் மீது வான் வழித் தாக்குதல்கள் நடத்துவதாக கூறிய அவர் அதனை நிறுத்தாவிட்டால் இஸ்ரேல் பணயக்கைதிகளை தூக்கிலிடத் தொடங்குவோம் எனவும் இஸ் ரேலியர்களுக்கு

# காசாவை அழிக்க இஸ்ரேல் நினைத்தால் ஈரான், ஹிஸ்புல்லா போரில் களமிறங்கும்

(காசா)

காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் அதிகரித்தால் ஈரானும், ஹிஸ்புல்லாவும் இந்த போரில் பங்கேற்க நேரிடும் என ஹமாஸ் நிர்வாகி ஒருவர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் தொடங்கியுள்ள நிலையில் இஸ்ரேல் தனது படைகள் மூலம் காசா மீது வான்வழித்தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் காசாவை அழிக்க வேண்டும் என்று இஸ்ரேல் நினைத்தால் இந்த போரில் ஈரானும், ஹிஸ்புல்லாவும் பங்கேற்க நேரிடும் என ஹமாஸ் நிர்வாகி அலி பராக்கே என்பவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட சர்ப்ரைஸ் தாக்குதல் ஒரு சில முக்கிய ஹமாஸ் நிர்வாகிகளுக்கு மட்டுமே தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சமரச முயற்சியில் சில உலக நாடுகள் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இரு நாடுகளுக்கும் மத்தியில் சமரச முயற்சியில் கட்டார் நாடு ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (5-6)

# ஆப்கான் நிலநடுக்க உயிரிழப்பு 4 ஆயிரத்தை கடந்தது



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4000ஐ கடந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் ஏறக்குறைய 2000 இற்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகியுள்ளதாக ஆப்கானிஸ்தான் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் கடந்த சனிக்கிழமை காலை 11 மணி முதல் 12 மணி வரை அடுத்தடுத்து 4 முறை பூகம்பங்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-6)

# காசாவில் 1500 ஹமாஸ் போராளிகளின் உடல்கள் கண்டெடுப்பு

## இஸ்ரேல் இராணுவம்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மற்றும் காசா பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1,500 ஹமாஸ் போராளிகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் காசா பகுதிக்கு அருகில் உள்ள அனைத்து இஸ்ரேலியர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளதாகவும் அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

இதேநேரம் காசாவை விட்டு வெளியேற விரும்பும் பாலஸ்தீனியர்களுக்கு திறக்கப்பட்டிருந்த எகிப்து வழியான பாதை தற்போது மூடப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப்படை அறிவித்துள்ளது. (5-6)

# மகனின் உயிரைக் காப்பாற்ற உயிரை விட்ட பெற்றோர்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பிடம் இருந்து மகனை காப்பாற்றுவதற்காக தாய் மற்றும் தந்தை இருவரும் தங்களது உயிரை கொடுத்துள்ளனர்.

இஸ்ரேலில் உள்ள ஷ்லோமி மத்தியாஸ், அவரது மனைவி டெபோரா மற்றும் அவர்களின் 16 வயது மகன் ரோத்தம் ஆகியோர் ஹமாஸ் அமைப்பின் துப்பாக்கி தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு அறையில் பதுங்கி இருந்துள்ளனர்.

இதன் போது, தொடர்ந்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர் இவர்கள் பதுங்கி இருந்த இடத்திற்கு கதவை உடைத்து கொண்டு வந்து துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

அப்போது பெற்றோர் இருவரும் மகன் மீது போர்வை போல் படுத்துக் கொண்டனர். இதனால், பெற்றோர் இருவரின் மீதும் குண்டுகள் பாய்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு 16 வயது மகன் வயிற்றின் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததையடுத்து, சிறுவன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு [illegible] (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரேல் பணயக் கைதிகளை ...லிடுவோம் - ஹமாஸ் எச்சரிக்கை

## ...ழை பொழிவிற்கு மத்தியில் இஸ்ரேலிய மக்கள் அச்சம்

**...ரிக்கை எதுவுமின்றி பாலஸ்தீன குடிமக்களின் ... மீது தாக்குதல் நடத்தினால் பதிலடி நடவடிக்கையாக ...திகளாக பிடித்து வைத்துள்ள இஸ்ரேலியர்களை ...ம் என ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலை கடுமையாக ...து.**





மரண தண்டனை வழங்கப்படும் வீடியோ மற்றும் ஒடியோகக ளையும் ஒளிபரப்புவோம் எனவும் எச்சரித்துள் ளார்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த வர்கள் இஸ்ரேல் பாது காப்புப் படை வீராங் கனைகளை பணயக் கைதிகளாக சிறைப் பிடித்து வைத்துள்ள காணொளியை வெளியிட் டுள்ளனர்.

இடத்தின் பெயர் குறிப் பிடப்படாத அந்த காணொ ளியில் வீராங்கனைகள் மட்டுமின்றி இஸ்ரேல் நாட்டுப் பெண்கள், குழந் தைகள், மூதாட்டிகளும் அடைத்து வைக்கப்பட்டுள் ளனர்.

குண்டு மழை பொழிய அதிரும் கட்டட அறை யில், அவர்கள் அஞ்சி நடுங்கும் காணொளி இணையத்தில் பல ரால் பகிரப்பட்டு வருகி றது. (5-6)

## தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை தாக்குதலுக்கு பயன்படுத்திய இஸ்ரேல்

(ஜெருசலேம்)

காசா மீது இஸ்ரேல் மிகவும் கொடூரமான தடை செய்யப்பட்ட குண்டுகளை வீசி தாக்குதல் நடத்து வதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன.

திடீரென பாலஸ்தீன ஹமாஸ் படைகள் இஸ்ரேல் மீது தாக்கு தலை ஆரம்பித்தது.

இதனால் இஸ்ரேல் போர் பிரக டனம் அறிவித்து இன்னும் போர் தொடர்ந்த நிலையில் காணப்படுகி றது.

இதன் போது இஸ்ரேல் காசா மீது தடை செய்யப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக தெரிய வந்துள்ளது.

இந்த வெள்ளை பொஸ் பரஸ் குண்டுகள் பூண்டு வாசனை கொண்ட ஒரு மெழுகு பொருளாகும். இவை வீசப்பட்ட இடத்தில் இருந்து பல மைல் தூரத்திற்கு புகை மண்டலமாக பரவக்கூடி யது.



மேலும், இவை மனித தோல் வெந்து உருகும் அளவிற்கு தீக்காயங்களை ஏற்படுத்தி மனிதர்களை நரக வேதனைக்கு தள்ளக் கூடியவையாகும்.

அத்தோடு, குழந்தைக ளுக்கு மூச்சுத்திணறலை ஏற்படுத்தக் கூடியவை. அது மட்டுமல்லாமல் இரத்த புற்றுநோயை கூட ஏற்படு த்தும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால் இதை குடியி ருப்புப் பகுதியில் பயன்படு த்தக் கூடாது எனவும் மீறி பயன்படுத்தினால் அது போர்க்குற்றம் ஆகும் என ஐ.நா கூறியுள்ளது.

இந்நிலையில், காசா மீது பொஸ்பரஸ் குண்டு களை வீசி இஸ்ரேல் தாக் குதல் நடத்தியுள்ளதாக குற்றச்சாட்டுகள் காணொளி ஆதாரத்துடன் வெளியாகி யுள்ளன. (5-6)

## போரில் வெகுவாக பாதிக்கப்படுவது குழந்தைகளே - யுனிசெப் கவலை



(வோஷிங்டன்)

காசாவில் மோதல் நடை பெற்றுவரும் பகுதியில் மனிதாபிமான நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதாக யுனிசெப் அறிவித் துள்ளது.

இது குழந்தைகள் மற் றும் குடும்பங்களுக்கு உயிர் காக்கும் சேவைகள் மற்றும் பொருட்களைக் கொண்டு வருவதற்கு தடங்கலாக இருப்பதாகவும் கூறியுள் ளது.

அனைத்து போர்களை போலவே இந்த போரிலும் வெகுவாக பாதிக்கப்படுவது குழந்தைகளே என்றும் யுனிசெப்பின் நிறைவேற்று அதிகாரி கத்தரின் ரசல் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரத்தைத் துண்டிப் பது, உணவு, எரிபொருள் மற்றும் நீரை காசாவுக்குள் கொண்டு செல்வதை தடுப் பது குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாகவும் தெரிவித் துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்தும் மறவாத பாரம்பரிய முறைமை:
# தளர்ந்துபின் தானெழும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது பிரதேசம் பல்வகை அறிவு சார்ந்து அனுபவங்களை சுமந்து தவத்திருவாய் வாழ்ந்த பூர்வீகங்களைக் கொண்ட எமக்கேயுரித்தான கலை கலாசார பின்னணிகளைப் பிரதிபலிக்கும் மக்கள் வாழும் பிரதேசம். இடையில் நடந்தேறிய பல்வகை முரண்பாடுகளால் அனைத்தும் சிக்கி சிதறி சின்னாபின்னமாக சிதைந்து விட்டதென பலர் அங்கலாய்த்தாலும் இன்னும் அவை ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவர் வாழ்வியலிலும் வெளிக்கொணர்ந்த வண்ணமே இருக்கின்றன. அடுத்து வரும் சந்ததிக்கு எமது பாரம்பரியத்தில் அதீத ஈடுபாடு இருப்பதை அறிந்தால் இவற்றை மேலும் பேணிப் பாதுகாக்கும் பொறிமுறைதானெழும்.

அழியவில்லை என்று கூறுவதை விட அழியாது என்று நெஞ்சுயர்த்திக் கொள்ளலாம். எமது பரம்பரையலகுகளுக்குள் ஒளிந்திருக்கும் இந்த பாரம்பரியம் எமது அடையாளத்தின் எழுவாய். புலம்பெயர்ந்த பரம்பரையலகுகள் அந்த சூழலுக்கேற்ப திரிபடைந்து மாறிவிடும் என்பதற்கும் மேலாக திரிபுகளுக்குள் எமது அடையாளத்தை தக்கவைக்கும் செயற்பாடுகளை காணும் போது பாரம்பரியம் பரம்பரை பரம்பரையாக பரம்பரையலகுகளுக்குள் நிச்சயம் சென்றடையும் எனலாம். எமது பாரம்பரியத்தை அறியவும் அதையொற்றி வாழவும் பிறதேசத்தவர் பிறமொழி பேசுபவர்கள் விருப்பப்படுகின்ற அளவுக்கு எமது வாழ்வியலை வளமாக்கி வாழ்ந்து காட்டினால் அதற்கான அங்கீகாரத்தை தக்கவைத்துக் கொள்ள்லாம். இங்கில்லை, புலம்பெயர்ந்த தேசத்தில் அதனை தேடியெடுத்து பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களையும் எமது பாரம்பரிய கலாசார விழுமியங்களுக்குள் வாழப்பழக்குவதனைக் கண்கொண்டு காணீர்.

பாரம்பரியம் என்பது எமது நடையுடை பாவனை என்பதற்கு மேலாக உணவுற்பத்தி, உண்ணும் உணவு, உணவு பகிர்ந்தளிப்பு, உணவு சேமிப்பு, எமது பயிரினம், பூர்வீக தாவர விலங்கினங்கள், இயற்கை வளங்களின் இருப்பு, பயன்பாடு, பாதுகாப்பு, தனி மனித குடும்ப சமூக சுகாதாரம், சுதேசமருத்துவம், உரிமை, தெரிவு, நற்சிந்தனை, மனப்பாங்கு, சொல்லாடல், மொழிப்பற்று, இறைவழிபாடு இவற்றுடன் ஆளுமை, ஆட்சியதிகாரம் என அனைத்தும் அடங்கும். இவற்றை வாழ்வாங்கு வாழ்ந்து அனுபவித்தவர்களுடன் உரையாடினால் அனைத்தையும் அறிந்து கொள்ளலாம். நல்ல வண்ணம் வாழ்வதற்கான நெறிமுறை தவறாத நேரியல் வாழ்வியலுக்கான அடித்தளமாகவே எமது பாரம்பரியம் உருவானது இன்னும் உருவகப்படுத்தப்பட்டது. அவ்வப்போது அதிலிருந்து இடறிவிலகி நடப்பிலிருந்த தவிர்க்கப்பட வேண்டிய செயற்பாடுகள் அனைத்தையும் பாரம்பரியத்தினுள் திணிப்பதும் நடந்திருக்கின்றது. அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டாலன்றி பின்வரும் சந்ததி அறிந்து சீர்மிகு வாழ வழியில்லாது போய்விடும்.

எமது பாரம்பரியத்தினுள் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு சிறப்பாகவே உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதனை அதனுள் உள்ளார்ந்து பார்த்தால் விளங்கும். உள்ளூர் உணவுப் பொருட்களைப் பயன்படுத்தியே எமது உணவின் வடிவம் இருந்தமையும் பழையதென்றாலும் பாங்காக அதனை பயன்படுத்திய காலங்களை நிச்சயம் இன்றைய இளையவர்கள் அனுபவிக்க வைத்தல் வேண்டும். எமது உணவு வகைகளுக்குள் உயிர்ச்சத்து இருந்தது. மருந்தாக பயன்பட்டது. தனி மனித குடும்ப சுகாதாரத்தை அதுவாகவே பேணிப் பாதுகாத்தது.

நேற்றைய தினம் மல்லாவி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமான தொழில்தகைமையாளராக்கும் பாடசாலை தோட்ட திட்டம் (Entrepreneurial School Garden) என்னும் கருத்துப் பொதி உணவுப் பாதுகாப்பினை மையப்படுத்தி (Food Security) கல்வி அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கண்காட்சி இன்றைய தினமும் நடைபெறுகின்றது. அனைவரும் பார்த்து கேட்டு அறிய வேண்டியவை பல மாணவர்களின் கல்வித் திணைக் களத்தின் விவசாயத் திணைக்களத்தின் விவசாய பீடத்தின் ஒன்றிணைவுடன் நடைபெறுகின்றது. வடமாகாண செயலாளர் அலுவலகத்தினது திட்ட அனுசரணையில் கல்வித் திணைக்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வு ஒப்பேறியிருக்கின்றது. இதில் பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் ஆசிரியர்களின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகின்றது. அனைத்து பாடசாலைகளிலும் இத்தகைய வகுப்பறைக்கு வெளியிலான செயற்பாட்டுக் கூடங்கள் மாணவர்களின் முயற்சியினால் ஆரம்பிக்கப்படுவது சிறப்புக்குரியதொன்று.

கறுப்பன் மொறுங்கன் நெல்லைபயிர் செய்து அதன் அரிசியில் சோறு காய்ச்சி அன்றிரவு நீரில் ஊறவைத்து அடுத்த நாள் பழஞ்சோற்றை பதமாக எடுத்து முதல் நாள் மீதியாக்கி சூடாக்கிவைத்த மீன் குழம்பை விட்டு பிரட்டிக்வளமாக தாய்மை தருகின்ற சுகமும் சுவையும் இன்னும் எந்த உணவிலும் வந்ததில்லை. பழஞ்சோறு, பழங்கறி கவளம் என்றாலும் அதனுள் அத்தனை பழைமையின் பாரம்பரியம் சுவையோடு இருந்ததும் தாய் அதனைக் குழைத்து தன் அன்பைமேல் வைத்து தந்த உணவு எப்படி தித்திக்காதிருக்கும். இந்த கவளம் பனையோலையில் பிளா கோலி அதனுள் வைத்து உண்ணும் சுகம் அவசியம் எம் சந்ததி அறிந்திருக்க வேண்டும். இந்த கரை பச்சையில்லை என்று அக்கரை நோக்கியோடும் இளையவர் குழாம் அங்கிருந்து பார்க்கையில் இக்கரையும் பசுமை யென்றறிந்த பின் கவலைப்பட்டு என்ன பயன்.

நாம் நாமாக வாழும் காலத்தை இறைவன் எமக்காக தந்தனன். இந்த காலம் இப்பிறப்பு பின்பு வராது. மூத்தோர் வீட்டிலிருந்தால் ஒவ்வொன்றாக சொல்லி அன்பு கலந்த கண்டிப்புடன் செய்யச் சொல்லி வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழப் பழக்கிவிடுவார்கள். நாம் தான் சுதந்திரம் வேண்டுமென்று சுமையென்று பெற்றவர்களை தவிர்த்து தந்திரமாக தனிக்குடியென்றுபோய் இறுதியில் இருந்த வாழ்க்கையையும் தொலைத்து விட்டு உறவுகளை தேடியோடி இறுதியில் அதனையும் தொலைத்து விடுகின்றோம். தகவல் தொழில்நுட்பம் வசதியான வாழ்க்கையென தந்தது இதைத்தானே என வழுக்கி விழுந்தவர்கள் ஆதங்கப்படுவதனை அறிய முடிகின்றது. இதில் மிஞ்சிப்போவது இருபக்கமும் அல்லல்படும் மனவுளைச்சலேயன்றி வேறேதுமில்லை.

வாழ்க்கை என்பதில் உடற் சுகாதாரத்துடன் உணவுமுறையும் முக்கியமாகின்றது. பாரம்பரிய உணவு முறைமைக்குள் அனைத்தும் அடங்கியிருந்தது. உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் கலந்த உணவாகவே அவை உருவாக்கப்பட்டன. சாதாரண வாழ்க்கை வாழும் படிப்பறிவில்லாத தாய், தந்தைக்கு கூட குடும்பத்திற்கு தேவையான ஊட்டச்சத்தை தேடிக் கொடுக்கும் கடமையிருந்தது. இதனையே அவரவர் வீடுகளில் இருக்கின்ற இட வசதியைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டங்களை அமைத்து தமக்கான உணவை தாமே தேடிக் கொண்டனர். வீட்டிலொரு தோட்டம் விளைந்தன. காய்கனிகள் கூடி விரும்பி விருந்துண்ண வைத்தது அந்த கூட்டுக் குடும்பம். தோட்டத்திலுள்ளவை தவிர்ந்த ஏனையவற்றுக்கு சந்தையை நாட வேண்டியிருந்தது. இன்றும் அந்த நிலையிலேயே இருக்க வைத்திருக்கின்றது. வந்துபோன இன்னும் வருமென எதிர்வுகூறும் கொவிட் எனும் கொடிய தொற்று வியாதி. உடலில் எதிர்ப்பு சக்தியில்லாதவர்களை தேடித் தாக்கிய இந்நோய் அவர்களில் பலரினது உயிரினையும் காவு கொண்டு விட்டது.

எங்களூர் விளையாட்டுகளை இப்போது அரிதும் புதிருமாக காணக் கிடைக்கின்றது. தனியனாக ஆடும் ஊஞ்சலும் இரண்டு பனைகளை இணைத்து வளை வைத்து கட்டி அதில் பலர் இருந்தாடும் ஊஞ்சல் எங்கிருக்கின்றது. இருகரையும் நின்று குனிந்து உந்துபவர்களின் உடல்தகுதி இன்று எந்த உடற்பயிற்சியையும் செய்தாலும் வராது. இவை பலருடன் இருந்து இணைந்து குதூகலிக்கும் மகிழ்ச்சிக்குரிய காலங்கள் என்பன மறைந்து போய் பலர் இணைந்த வாழ்க்கையை இணையத்தளம் உருக்குலைத்து விட்டது. இந்த படங்களை இணையத்திலும் தேட முடியாது. தகவல் தொழில்நுட்பம் தந்த நன்மைகள் பல அதன் பயன்பாட்டை முறையாக பயன்படுத்தாமல் அதன் மோகத்துக்குள் மூழ்கிய பல இளையவர்கள் வாழ்வாங்கு வாழத் தெரியாமல் உருக்குலைந்து போயினர். நல்ல விடயங்களை அவரறிய வைப்போம்.

கிராமத்து ஒற்றுமை அனைவரும் ஒன்று சேர்ந்து இயங்கும் போது மட்டுமே முழுமை பெறுகின்றது. ஆனால் அதனை மீண்டும் மீட்டெடுத்து அனைவரையும் குதூகலிக்க வைக்கும் நிகழ்வுகளை முழுமனதாக வரவேற்போம். எம்மவர்கள் எம்மை நோக்கி வருவதற்கான வழிவகைகளை மீட்டுப் பார்ப்போம். நல்லூரானின் திருவிழாவினை பார்க்க வெளியிடங்களிலிருந்து குவிந்தவர்கள் ஆயிரம் ஆயிரம். அதுபோல எமது பாரம்பரிய உணவு, வாழ்க்கை முறையை வாழ்ந்து பார்க்க எம்மவர்கள் நிச்சயம் விருப்பப்படுவர். அவர்களுக்கான இடங்களை உருவாக்கினால் அதிலேயே எமது சுற்றுலாத்துறை விருத்தியடையும். எமது பாரம்பரிய முறைகளுக்கு நாம் விரைந்து முக்கியத்துவம் கொடுத்தால் அவை எம்மையும் வாழ வைத்து எமது சந்ததியையும் மீட்சியடைய வைக்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மாதங்கள் போராட்டம் நடத்தியும் தீர்வுகள் எட்டப்படவில்லை

## பொன்னாவெளி மக்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பொன்னா வெளி பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் போராடி வரும் நிலையிலும் அதற்கான எந்த தீர்வுகளும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த கிராமமான பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ சீமெந்து உற்பத்திக்கு தேவையான சுண்ணக் கல்லை அகழ்வது தொடர்பான ஆய்வுகள் கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டு தற்போது சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொன்னாவெளி பகுதிகளை சேர்ந்த மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்து கடந்த இரண்டு மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர், மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் ஏனைய ப்பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதி நிதிகள், பொது அமைப்புகள் என பல தரப்பினருக்கு 28 இற்கும் மேற்பட்ட மகஜர்களை கையளித்துள்ள போதும் இது வரை உரிய அதிகாரிகளிடமிருந்து எந்த விதமானபதில்களும் கிடைக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமக்கான ஒரு நிரந்தரமான நியாய பூர்வமான தீர்வை தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (5-6-315)


## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber/ Whatsapp: 076 636 3378

E.mail:
Valampurii@yahoo.com


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2934


பவானி




மலர்




குமார்





கிருசாந்தி




பிரியதர்ஷினி




சுபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 305





"மேற்கே, கேரளம், குடமலை, கொல்லம் ஆகிய நாடுகள் அவருடைய காலடியில் வந்து பணியும். பிறகு வடதிசை நோக்கிப் புறப்படுவார். வேங்கி, கலிங்கம், இரட்டபாடி, சக்கர்க்கோட்டம், அங்கம், வங்கம், கோசலம், விதேகம், கூர்ஜரம், பாஞ்சாலம் என்னும் நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்வார். காவியப் புகழ் பெற்ற கரிகால வளவனைப் போல் இமயமலைக்கும் சென்று புலிக்கொடியை நாட்டுவார். வீரசேனாதிபதிகளே! இப்படியெல்லாம் நமது தென்திசை மாதண்ட நாயகர் திட்டம் இட்டிருக்கிறார். தமிழகத்தில் வீரத்தமும் வயிர நெஞ்சமும் படைத்த அனைவருக்கும் வேண்டிய வேலை இருக்கும் தத்தம் வீர பராக்கிரமங்களை நிலை நாட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகையால் நீங்களும் உங்கள் தெரிஞ்ச கைக்கோளப் படையும் பொறுமை இழக்க வேண்டாம்"

சேனாதிபதிகள் மூவரும் ஏக காலத்தில் சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க! இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க! மகா மந்திரி அநிருத்தர் வாழ்க!" என்று கோஷித்தார்கள்.

பிறகு அவர்களில் ஒரு படைத் தலைவன் கூறினான் . "மகா மந்திரி! இன்னும் ஒரே ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள விரும்புகிறோம். எங்கள் படையின் பெயர் 'சுந்தர சோழ தெரிஞ்சகைக்கோளப் படை' என்பது தாங்கள் அறிந்ததே."

"தெரிந்த விஷயந்தான்."

"சுந்தரசோழ சக்கரவர்த்தியின் திருப்பணியில் உயிரையும் விடுவோம் என்று பகைவர்களின் இரத்தம் தோய்ந்த சிவந்த கையினால் அடித்துப் பிரமாணம் செய்து கொடுத்தவர்கள்."

"அதுவும் நான் அறிந்ததே."

"ஆகையால் சக்கரவர்த்தியைத் தவிர வேறு யாரையும் நாங்கள் சேரமாட்டோம் வேறு யார் சொல்வதையும் கேட்கமாட்டோம்."

"உங்களிடம் நான் எதிர்பார்த்ததும் இதுவேதான்!"

"முன்னொரு காலத்தில் பழுவேட்டரையர்களின் மாபெரும் சேனையில் ஒரு பகுதியாக இருந்தோம். அது காரணம் பற்றி எங்கள் பேரில் யாருக்கும் யாதொரு சந்தேகமும் ஏற்படக் கூடாது."

"ஆகா! இது என்ன வார்த்தை? யாருக்கு என்ன சந்தேகம்"

"தஞ்சாவூரில் நடப்பது பற்றி ஏதேதோ வதந்திகள் காற்றிலே வருகின்றன."

"காற்றிலே வருகிறது காற்றோடு போகட்டும். நீங்கள் அதையெல்லாம் நம்பவும் வேண்டாம் திருப்பிச் சொல்லவும் வேண்டாம்."

"கொடும்பாளூர் வேளாளர்கள் ஏதாவது எங்களைப் பற்றிச் சந்தேகத்தை கிளப்பக்கூடும்."

"கிளப்ப மாட்டார்கள் கிளப்பினாலும் யாரும் கேட்க மாட்டார்கள்."

"மனித காயம் அநித்தியமானது."

"அதனால் சுத்த வீரர்கள் உயிருக்குப் பயப்படமாட்டார்கள்."

"திரிபுவன சக்கரவர்த்தியானாலும் ஒரு நாள்."

"இறைவன் திருப்பாதங்களை அடைய வேண்டியது தான்."

"சக்கரவர்த்திக்கோ உடல் நிலை சரியாக இல்லை."

"வானத்தில் வால் நட்சத்திரம் பிரகாசிக்கிறது"

"சக்கரவர்த்திக்கு அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால், எங்கள் படை வீரர்கள் அருள்மொழிவர்மரின் அகப் பரிவாரமாக விரும்புகிறார்கள்"

"சக்கரவர்த்தியின் ஆக்ஞையின் படி நடப்பது உங்கள் கடமை"

"சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எங்களுக்குத் தெரிவிப்பது தங்களுடைய கடமை. தாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லது தஞ்சைக்குப் போய்ச் சக்கரவர்த்தியைத் தரிசிக்க எங்களுக்கு அனுமதி கொடுங்கள்"

"வேண்டாம் நீங்கள் தஞ்சை போவது உசிதமல்ல வீண் குழப்பம் ஏற்படும்.

சக்கரவர்த்தியைக் கண்டு உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்துவதை நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாக இருங்கள்" .

"தங்களிடம் தெரியப்படுத்தியதுமே எங்களுடைய மனத்திலிருந்த பாரம் நீங்கிவிட்டது. போய் வருகிறோம்" தெரிஞ்சகைக்கோளப் படைத் தலைவர்கள் மூவரும் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.


(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## நலமாய் வாழ்வோமா?

- அதிகாலை கண் விழித்து நன்மைகளை நினைப்போம்.
- சுட்டாறிய நீரை நிரம்பவே அருந்துவோம்.
- இயற்கைக் கடனைக் கிரமமாய் கழிப்போம்.
- தினமும் எண்ணெய் தலைக்கு வைப்போம்.
- யோகப்பியாசம், தேகப்பியாசம் செய்வோம்.
- தினமும் காலையில் குளிப்பதை வழக்கமாக்குவோம்.
- பச்சை மூலிகை தினசரி உண்போம்.
- இயற்கை உணவை இயல்பாக உண்போம்.
- உண்டதும் உரிமையாய் ஓய்வு சிறிது எடுப்போம்.
- பகலில் உறக்கத்தை பகையாய் எதிர்ப்போம்.
- மாலையில் மகிழ்வாய் உடலைக் கழுவுவோம்.
- சூடான நல் உணவை இரவில் உண்போம்.
- உண்ட பின் பழங்கள், பால் உண்போம்.
- உறங்க முன் தியானத்தால் மனச்சுமை போக்குவோம்.

ந.மதுஷா,
தரம் 5B.



பி.எஸ்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு செலுத்த உத்தரவிடுவதே
எனது இறுதிக் கட்டளை.
- இயேசு நாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனிதர்களைக் கொல்லுகின்ற யுத்தத்தை உடன் நிறுத்துக!

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்*

என்றான் வள்ளுவன்.

இந்த உலகில் எல்லா உயிர்களும் யாரைத் தொழும் என்று வள்ளுவரிடம் கேட்டால், அதற்கு அவர் தருகின்ற பதிலே மேற்போந்த திருக்குறளாகும்.

ஆம், கொல்லாமை என்பது மிக உயர்ந்த அறம். அதிலும் கொலை என்பது புலால் உண்ணுகின்ற ஆசையால் ஏற்படுவது.

எனவே புலாலை மறுத்துவிட்டால் கொல்லுகின்ற பெரும் பாவத்தைச் செய்யாமல் விலகிக் கொள்ள முடியும்.

மாறாக, புலால் உண்ணுவதில் ஆசை வயப்பட்டவர் பிற உயிர்களைக் கொன்று அதன் புலாலை உண்ணுவதற்கு தயங்கமாட்டார்.

ஆக, மரண பயம் என்பது அனைத்து ஜீவ ராசிகளுக்கும் பொதுவானது.

அதேசமயம் கொல்லப்படும்போது ஏற்படுகின்ற வலியும் வேதனையும் ஓரறிவு கொண்ட ஜீவராசிகள் முதல் ஆறறிவு படைத்த மனிதர்கள் வரையில் அனைவருக்கும் சமனே.

எனவே ஆறறிவு கொண்ட மனிதன் ஏனைய ஜீவராசிகளைக் கொல்லாமல் அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

இதை யார் செய்கிறார்களோ அவர்களை எல்லா உயிர்களும் கையெடுத்து கும்பிடும்.

இஃது மனிதக் கொலை நடைபெறாது என்ற எடுகோளின் அடிப்படையில், ஏனைய ஜீவராசிகளைக் காப்பாற்றும் பொருட்டு வள்ளுவர் வகுத்தது.

ஆனால் இங்கோ மனித இனத்தை அழிக்கின்ற மிகப்பெரும் கொடுமை நடந்தாகிறது.

ஆம், இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதோடு, இஸ்ரேல் படை காசாப் பகுதியில் பெரும் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

இந்த இரு தரப்பு யுத்தத்தால் மனிதர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகின்றனர்.

ஓ! உலகமே எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா? என யுத்தப் பிரதேசத்துக்குள் அகப்பட்டுள்ள மக்கள் கூக்குரல் இடுவதைப் பார்க்கும்போது இதயம் கருகிப் போகிறது.

என்னே! கொடுமை ஐ.நா சபை. அதில் அங்கம் பெற்றுள்ள நாடுகள். பாதுகாப்புச் சபை அதன் தீர்மானங்கள் என ஏற்பாடுகள் பலவாறு இருக்கின்றபோதிலும் இஸ்ரேலுக்கும் - ஹமாஸ் தீவிரவாதத்துக்குமிடையே நடக்கின்ற கொடும் போரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை எனில், ஐ.நா சபை எதற்கு என்ற கேள்வி எழவே செய்யும்.

இரண்டு தரப்புகளுக்கிடையே யுத்தம் மூண்டுவிட்டால், அதனை உடனடியாக நிறுத்தி பொது மக்களைப் பாதுகாப்பதுதான் உலக நாடுகளின் கடமையாக இருக்க வேண்டும்.

ஆனால் இஸ்ரேலுக்கு போர்க்கப்பலை அனுப்புவதும் ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் புகழாரம் சூட்டுவதிலுமே நாடுகள் ஈடுபட்டுள்ளன என்றால், எப்படி சமாதானம் ஏற்பட முடியும்.

ஆக, மூண்டுள்ள யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதனைச் செய்வது அனைத்து உலகநாடுகளினதும் தலையாய கடமையாகும்.

# தென்பகுதியில் நடந்த வன்முறை; சூத்திரதாரி கோட்டா தரப்பினரே

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

தென்னிலங்கையில் இடம்பெற்ற பல வன்முறைச் செயல்களுக்குப் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான குழுவினரே செயற்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இணையவழி கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தான் இராணுவத் தளபதியாக செயற்பட்ட போது கொழும்பில் சில நடவடிக்கைகளுக்கு நேரடியாக உத்தரவு வழங்கவில்லை எனவும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவே உத்தரவு வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயும் கோட்டாபய வழிநடத்திய குழுவில் இடம்பெற்றிருந்ததாக பொன்சேகா சுட்டிக்காட்டினார். (5-6)

## புலமைப்பரிசில் மேலதிக வகுப்புகளுக்கு தடை

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்களை இன்று நள்ளிரவின் பின்னர் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்து 888 பரீட்சை மத்திய நிலையங்களில் எதிர் வரும் 15ஆம் திகதி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## பாடசாலை மாணவர்களின் வருகை பரீட்சை பெறுபேறுகளுடன் சேர்க்கப்படும்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

மாணவர்களுக்கு பாடசாலை வருகை கட்டாயமானது எனவும் பாடசாலை வருகைக்கான புள்ளிகள் பரீட்சை பெறுபேறுகளுடன் எதிர்காலத்தில் சேர்க்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மாற்றத்தின் கீழ், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு கூட மாணவர்கள் வருகைக்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புள்ளிகளைப் பெற வேண்டும்.

1,500 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை ஒரு மண்டபத்தில் கூட்டி சொற்பொழிவு செய்வதன் மூலம் கல்வி என்பது அடையக் கூடிய ஒன்று அல்ல.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் உட்பட ஆரம்ப வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இவ்வாறான கற்பித்தல் முறைகளை பிரயோகிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (5-6)

# நீதித்துறையையே கைவிட்ட அரசு எப்படித் தீர்வைத் தரும்?

## அநுரகுமார கேள்வி

(கொழும்பு)

"நீதிபதியை வெளியேற்றி நீதித்துறை சமூகத்தை வீதியில் விட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு, இன, மதப் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வை வழங்கும்? இந்த அரசை இனியும் நம்புபவர்கள் படுமுட்டாள்களாவர்." என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுகளை நடத்தவுள்ளேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

"சர்வதேச சமூகத்தை மாத்திரமல்ல இங்குள்ள அரசியல் வாதிகளையும் மக்களையும் ஏமாற்றி ஆட்சியைத் தக்க வைக்கலாம் என்று ஜனாதிபதி தலைமையிலான அரசு கனவு காண்கின்றது.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அரசின் கனவு தவிடுபொடியாகிவிடும்.

இங்குள்ள சில அரசியல்வாதிகள் கோமா நிலையில் இருந்தாலும் நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள்.

வடக்கு கிழக்கு சென்று ஒன்றையும் தெற்கில் இன்னொன்றையும் வெளிநாடு சென்று மற்றொன்றையும் மாறிமாறி சொல்லித் திரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பகிரங்கமாக ஒரு சவாலை விடுகின்றோம்.

அதாவது முடிந்தால் தேசிய ரீதியில் ஒரு தேர்தலை நடத்திக் காட்டுங்கள்." என தெரிவித்தார். (5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை **காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில்** டீசல் மற்றும் மோட்டார் பொறியியல் PLC-அரியாலை, முள்ளி, அரியாலை, நாவலடி, பூம்புகார் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** [illegible] ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும்போக பயிர் சேதங்களுக்கு இழப்பீடு

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவிய வறட்சியால் பெரும்போகத்தில் மட்டும் சுமார் 58 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளதுடன் பயிர்கள் சேதமடைந்த 53 ஆயிரத்து 965 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (5-6)

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

08



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அதன் பின்னர் கோணப்பு பண்டாரன் என்பான் விமலதர்ம சூரியன் என்ற பட்டப்பெயருடன், கண்டி இராச்சியத்தின் அரசனா கினான்.

### முதலாம் விமலதர்ம சூரியன் (1591-1604)

முதலாம் விமலதர்ம சூரியன் அல்லது கோணப்பு பண்டாரன் அல்லது தொன்ஜுவான் என்பவர் இலங்கையில் 1591 இலிருந்து 1604 வரை ஆட்சி செய்த கண்டி இராச்சிய மன்னராவார். போர்த்துக் கேயருக்கு எதிராக இவர் புரிந்த தந்துரேப்போர், ,பலனைப் போர் என்பன குறிப்பிடத்தக்கவை.

கோணப்பு பண்டாரன் வீரசுந்தர பண்டாரனின் மகன் ஆவார். முதலாம் இராஜசிங்கன் கண்டி ராச்சியத்தை பரிபாலுப்பதற்காக பிரதிநிதியாக வீரசுந்தரபண்டாரவை நியமித்தார். பின்னர் இவர் மீது சந்தேகப்பட்டு அவரை பொறிக்கிடங்கில் வீழ்த்திக் கொலை செய்தவுடன், கோணப்புபண்டாரன் போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தார். கோணப்புப்பண்டாரன் தொன் ஜுவான் என்னும்கத்தோலிக்கப் பெயரில் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர், போர்த்துக்கேயர் தொன்ஜுவானின் தலைமையிலான படையைக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற அனுப்பி வைத்தனர். கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டவுடன், தொன பிலிப் (யமசிங்கபண்டாரன்) அரசனானார். ஆனாலும் யமசிங்க பண்டாரனைக் கொன்று, தொன் ஜுவான் போர்த்துக்கேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து 1591 ஆம் ஆண்டு முதலாம் விமலதர்ம சூரியன் என்ற பெயரில் கண்டிக்கு அரசனானார்.

### 1592 போர்

முதலாம் விமலதர்மசூரியன் கண்டிக்கு அரசனானதும் 1592 இல் முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தார். ஆனாலும் இவ்வாக்கிரமிப்பு முதலாம் விமலதர்மசூரியனால் முறியடிக்கப்பட்டது.

### தந்துரேப்போர்

1594 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் பேரோலோ பேஸ்டிசூசா என்ற தளபதியின் கீழ் ஒருபடையைக் கண்டிக்கு அனுப்பி வைத்தார்கள். இப்படையுடன் தொன்பிலிப் என்கின்ற யமசிங்கபண்டாரவின் மனைவி குசுமாசனதேவியையும் (டொனாகதரீனா) கூடவே அனுப்பினர். முதலாம் விமலதர்மசூரியன் இப்போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தார். தந்துரே எனும் இடத்தில் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பை முறியடித்ததால் இப்போர் தந்துரேப் போர்என அழைக்கப்படுகின்றது. இதன் பின் குசுமாசனதேவியை (டொனா கதரீனா) விமலதர்ம சூரியன் மணம் செய்து தனது ஆட்சி உரிமையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்.

### பலனப்போர்

1602 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காகத் தொன் ஜெரனி மோடிஅசவேது எனும் படைத் தளபதியின் கீழ் ஒரு படையை அனுப்பி வைத்தனர். இவ்வாக்கிரமிப்பின்போது போர்த்துக்கேயர் வெற்றிகரமாக முன்னேறிச் சென்றனர். ஆனாலும் போர்த்துக்கேயரின் படையில் சேவை செய்து வந்த இலங்கைப் படை வீரர்கள் முதலாம் விமலதர்ம சூரியனின் படையுடன் இணைந்து கொண்டதால் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டனர். பலன எனும் இடத்தில் 'போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டதால் இப்போர் பலனப் போர் என அழைக்கப்படுகின்றது.

முதலாம் விமலதர்மசூரியன் சப்பிரகமுவ மாகாணத்தில் போர்த்துக்கேயரின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காகத் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புத்தரின் தந்ததாதுவைக் கொண்டு வந்து கண்டியிலுள்ள தலதாமாளிகையில் வைப்பித்தார். அத்தோடு, ஒவ்வோர் ஆண்டும் தலதா ஊர்வலத்தை நடத்துவித்தார். மேலும் பர்மாவின் தென்பகுதியிலிருந்து புத்த பிக்குகளை வரவழைத்து உபசம்பதா என்னும் சடங்கைச் செய்வித்தார். இலங்காதிலக, கடலாதெனிய, ரிதி, தெகல்தொருவ முதலிய விகாரைகளைப் புனருத்தாரணம் செய்தார்.

### செனரத் (1604-1635)

செனரத்தின அல்லது செனரத் 1604 முதல் 1635 வரை கண்டி அரசை ஆண்ட மன்னர் ஆவார். முதலாம் விமலதருமனுக்கு அடுத்த படியாக செனரத் கண்டியை ஆண்டதாகச் சொல்லப்பட்டாலும் விமல தருமனின் மரணத்துக்குப் பின்னர் என்ன நிகழ்ந்து, எவ்வாறு செனரத் மன்னர் ஆனார் என்ற தகவல்கள் தெளிவில்லை. முதலாம் விமலதருமனின் சகோதரன் அல்லது ஒன்று விட்ட சகோதரன் எனக் கூறப்படுகிறது. இறந்த மன்னரின் மனைவி, டொனாகதரீனாவை மட்டுமன்றி, அவளது இரு மகள்மாரையும் மணந்த இவர் கண்டி வரலாற்றில் புதிராகவே விளங்குகின்றார். இவர் சிவனொளிபாதமலையில் பூசாரியாகப் பணியாற்றினார் எனவும், தொன்கதரீனாவை மணக்கும் பொருட்டு பூசாரித் தொழிலைக் கைவிட்டு கண்டி வந்ததாகவும் கூறப்படுகிறது.

இவரது ஆட்சியில் அடிக்கடி போர்த்துக்கேய ஆக்கிரமிப்புகளும் உள்ளூர் கிளர்ச்சிகளும் கண்டியைப் பாதித்ததாகத் தெரியவருகின்றது. ரந்தெனிவலையில் நிகழ்ந்த போரில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த இவரது பெறாமகன் குமாரசிங்கனது வீரம் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. எனினும், இவரை அடுத்து வாரிசுரிமைச் சிக்கல் வந்தபோது, தந்திரமாகத்தன் இருபெறா மக்களைத் தவிர்த்துவிட்டு, இராஜசிங்கனை முடிசூட்டினாரா. அவர்கள் இருவரும் சில காலத்துக்குள்ளாகவே மர்மமாக இறந்தனர். கற்பிட்டிப் பகுதியில் போர்த்துக்யேரால் பெருமளவு அச்சுறுத்தல்களைச் சந்தித்த சோனகர் இவரிடம் அடைக்கலம் கோர, இவர் கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பகுதியில் அவர்களைக் குடியேற்றுவித்தார்.

### இரண்டாம் இராஜசிங்கன் (1635-1687)

இரண்டாம் இராஜசிங்கன் (முடிசூட்டலுக்குமுன்இளவரசன் மகாஸ்தானன், விந்தனைத் தெய்வம்) 1635 (சில ஆதாரங்கள் ஆண்டை 1629 என்றும் குறிப்பிடுகின்றன.) முதல் 1687 வரை இலங்கையின் கண்டி அரசை ஆண்ட சிங்கள மன்னன் ஆவான். கண்டி அரசின் இரண்டாவது மன்னனான செனரத்தினதும் டொனா கதரீனாவினதும் மகன் தான் மகாஸ்தானன். இலங்கைத் தீவின் கரையோரம் முழுக்க போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருக்க, மத்தியில் தன்னாட்சி அலகாக கண்டி அரசு மட்டுமே எஞ்சியிருந்தது. அதையும் கைப்பற்ற போர்த்துக்கேயர் முழுமுயற்சி எடுத்துக் கொண்டிருந்த காலத்தில், 1612 இல், கண்டிக்குள் நுழைந்த போர்த்துக்கேயரை புறமுதுகிட ஓடவைத்தான் இளம் வீரன் மகாஸ்தானன். தந்தையை அடுத்து 1635 இல் ஆட்சியில் அமர்ந்த மகாஸ்தானன், இரண்டாம் இராஜசிங்கன் என்ற பெயரில் முடிசூடிக் கொண்டான்.

போர்த்துக்கேயரிடமிருந்து கண்டியைக் காப்பாற்றுவதற்காக, ஒல்லாந்தரின் உதவியை நாடி, செனரத் எடுத்த முயற்சிகளை 2ஆம் இராஜசிங்கனும் தொடர்ந்தான். கண்டிக்கும் ஒல்லாந்துத்தூதர், மார்செலிஸ் போஸ்சோவருக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்தானாலும் அது நடைமுறையில் இருக்கவில்லை. 1638 மார்ச் 28 இல் நிகழ்ந்த கன்னொருவைப் போரில் இராஜசிங்கனும் போர்த்துக்கேயரை வெற்றி கண்டிருந்தான். இதையடுத்து, மே23இல், டச்சு கடற்படைத்தலைவன் ஆதம் வெஸ்டர் வோல்டுடன் உதவிகோரி ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திட்டான்.

இறுதியாக, கண்டி - டச்சு இணைப்படையொன்று 1639 மே 18 இல், கண்டியின் ஆட்சிப் பரப்பான மட்டக்களப்பு மீது படையெடுத்து, அதைக் கைப்பற்றியிருந்த போர்த்துக்கேயரை ஓடஓட விரட்டியது. 1640 மார்ச் 13 இல் இக்கூட்டுப் படைகாலியைக் கைப்பற்றியதுடன், 1641 இல் மேற்கிலங்கையில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் பெருமளவு நீங்கியது.

1649 வரை, கிழக்கிலங்கையில் போர்த்துக்கேயரின் ஆதரவாளர்களுக்கான தன் பழைய பழிக்கணக்குகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளிலேயே கண்டி அரசு ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. நிலங்களை எரிப்பதும் கிராமங்களை இடம்பெயரச் செய்வதும் கீழை இலங்கையைத் தம்கைக்குள் வைத்திருந்த டச்சுக்கும் பெரும் தலையிடியாக இருந்ததால், அவர்கள் கண்டியுடன் சமாதானத்துக்கு வந்தனர். 1649 இல், கண்டி - டச்சு நல்லுறவு புத்துயிர்ப்படைந்ததாகத் தெரிகின்றது.

இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்காக டச்சு (ஒல்லாந்து) அரசை உதவிக்கழைத்து, அதில் 1656 இல் வெற்றி கண்டவன் இவன். எனினும், போர்த்துக்கேயரை வெளியேற்றி, தம்மை ஒரு பலமிக்க காலனித்துவ சக்தியாக நிலைநிறுத்துவதே ஒல்லாந்தரின் திட்டம் என்பதை அவனால் சற்றுதாமதமாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

தொடர்ச்சியான போர்களால் கண்டி அரசு பலமிழந்திருந்தது. உட்கலவரங்களும் கரையோரங்களைப் பிடித்திருந்த ஒல்லாந்தரும் மட்டுப்பட்ட வளங்களுடன் கண்டி அரசைத் திண்டாட வைத்திருந்தன. இந்நிலையில் 1652இல் போர்த்துக்கேயருக்கு எதிராக இறுதிப் போரை ஆரம்பித்திருந்த கண்டி - டச்சுகூட்டுப்படை, ஒகஸ்ட் 1655 இல் ஜெரார்டுபீட் டர்சு அல்ஃப் தலைமையில், படையெடுத்துச் சென்று, போர்த்துக்கேயரின் தலைநகர் கொழும்பைத் தாக்க ஆரம்பித்திருந்தது.

டச்சு அரசு மீது நம்பிக்கை இழந்திருந்த இராஜ சிங்கன், 1656இல் கொழும்பைக் கைப்பற்றிய டச்சுப்படை, கண்டிப் படையை வெளியே விட்டுவிட்டு, கோட்டையை ஆக்கிரமித்துக் கொண்டதுடன் சீற்றமுற்று, 1640 களில் கீழை நாட்டில் தான் ஆட்டிய வெறியாட்டத்தை கொழும்புப் பகுதியிலும் தொடர்ந்துவிட்டு, படைகளை மீள அழைத்துக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்தின்...

வருமான சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் கைத்தொழில் துறை மற்றும் அனைத்து வர்த்தகத் துறைகளும் அதிக செலவீனங்களைச் சுமக்க நேரிடும் எனவும், இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டிருப்பதால் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## மின்சாரக்...

வரும்என்று தெரிவித்த அதிகாரி, பொதுப் பயன்பாட்டுச் சட்டத்தின்படி மக்களின் கருத்துக்களைப் பெற 21 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்மாதம் 18ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மக்களிடம் வாய்மூல கருத்துக்களை பெற்றுக் கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, மக்களிடம் வாய்மூல கருத்துக்களை பெற்ற பிறகே அனுமதி வழங்கப்படும் என்று கூறியுள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா குருக்கள் புதுக்குளத்தைச் சேர்ந்த விஜயரத்தினம் ஜெயந்தினி (வயது - 44) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர்ந்து சென்ற போதே உயிரிழந்துள்ளார். அத்தோடு அவரது 22 வயதான மகன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ம-7)

## மூவருக்கு...

டனை விதித்து தீர்ப்பளித்தார்.

1992ஆம் ஆண்டு நவுந்துடவ பிரதேசத்தில் மீகமவத்தை பகுதியை சேர்ந்த நபரை தாக்கி கொலை செய்ததாக இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்படி 3, 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கொலைச் சம்பவத்தின் முதலாவது பிரதிவாதிக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாவது சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ம-7)

## விலகியவர்கள்...

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பலர் பல கட்சிகளை அமைத்துக் கொண்டார்கள். இது அவர்களின் ஜனநாயக உரிமை.

அவர்கள் மீண்டும் நம் கட்சிக்கு வருவார்களா? என்று தீர்மானித்ததன் பின்னர் அதுபற்றி யோசிக்க முடியும். நம் கதவு எப்போதும் திறந்திருக்கின்றது. யார் என்றாலும் வர முடியும். போகவும் முடியும். சென்றவர்கள் மீண்டும் வர நினைப்பார்களானால் வரலாம்.

45 வருடங்கள் எனது தந்தைக்கு எதிரியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க முடியுமானால் 45 வருடங்கள் எனது தந்தையுடன் இருந்தவர்களுடன் கலந்துரையாடுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

அத்தோடு தற்போது நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் விலை அதிகரிப்புக்களை கவனத்தில் கொண்டு அரசாங்கத்துடன் கலந்துரையாடி கிராமிய மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். வரவு-செலவு திட்டத்திலும் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்" இவ்வாறு நாமல் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தல்களை...

நீதி அமைச்சர் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார். இதுதொடர்பில் ஆராய அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நீதி அமைச்சர்,

"அரசாங்கம் தேர்தல் முறையை மாற்றுவது குறித்து ஆலோசனைகளை நடத்தி வருகிறது. அதனால் தான் நான் முன்வைத்த தீர்மானத்தை ஆராய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறை சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல" என்றார்.

மேலும் தேர்தல் முறை மாற்றம் என்ற போர்வையில் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயுட்காலம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளை எட்ட உள்ள நிலையில் அவற்றுக்கான தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைய சந்திப்பின்போது தேர்தல் சீர்திருத்தங்கள் அல்லது எந்தவொரு தேர்தலை ஒத்திவைப்பது குறித்தும் ஒருபோதும் கலந்துரையாடவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜெய்சங்கர்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

'IORA' மாநாடு இன்று புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்துள்ளார். .

'IORA' அமைப்பின் 2023-2025 காலப்பகுதிக்கான தலைமைப் பதவியை இலங்கை வகிப்பதால் இம்முறை 'IORA' மாநாடு இலங்கையில் இடம் பெறுகிறது.

சீன ஆய்வுக் கப்பலுக்கு இலங்கை அனுமதித்துள்ள நிலையில் ஜெய் சங்கரின் வருகை முக்கிய விடயமாக பார்க்கப்படுகிறது.

அரசியல் ரீதியில் ஜெய்சங்கரால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பல வேறு அரசியல் தலைவர்களை ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

மேலும் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் பல உடன்படிக்கைகள் இன்று கைச்சாத்திடப்படவுள்ளன.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கை உயர்மட்ட தலைவர்கள் ஆகியோருக்கு இடையில் இந்த உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்படவுள்ளன.

01. பத்தாயிரம் வீட்டுத் திட்டத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

02. இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

03. இந்திய முன்னணி நிறுவனங்களை இலங்கையில் முதலீடு செய்யும் வகையிலான உடன்படிக்கைகளும் இன்று கைச்சாத்திடப்படவுள்ளன.

04.இந்த உடன்படிக்கைகள் தவிர்ந்த மேலும் பல உடன்படிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையில் இன்று எட்டப்பட்டவுள்ளதாக தெரிய வருகின்றது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2023/10/10
சீட்டிழுப்பு இலக்கம் 5263
U 5 3 3 6 5 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3505
சீட்டிழுப்பு திகதி 10.10.2023
P 11 35 50 77
P
57326

Lucky 7
திகதி 10.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0089
L7 இலக்கம் 3 2
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
மேஷம் 1 1 5 4 2 9

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.10
சீட்டிழுப்பு இலக்கம் 572
தனுசு 03 26 33 59 தனுசு

தன நிதானய
திகதி - 2023.10.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1293
X 24 25 63 65 X
32751

மெகா பவர்
திகதி 10/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1611
A 05 07 17 62 63
19180

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2237 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.10 தினம் செவ்வாய்க்கிழமை
37 40 49 58 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,536,404.40

சனிதா
திகதி 2023.10.10 வெற்றி வாரம் 4398 வர்ணம் பச்சை
18 35 48 58 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,170,604.00
87318

சசிரி
வெற்றி வாரம் 387
சீட்டிழுப்பு திகதி 2023.10.10
03 05 12
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,135,600/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3949 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.10 தினம் செவ்வாய்க்கிழமை
12 31 44 45 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,548,052/-
880397 294

திகதி 10.10.2023 வெற்றி வாரம் 1413
C 03 04 52 66 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 450,293,024.20
523184 688
DLB தொலை பேசி: 011-2 333 516-17 Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2063
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.10.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,655,648/-
21 38 54 57 A
207436

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.

★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528

(17405)

## துரித...

கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பூகோள ரீதியான அமைவிடமும் மனித வளமும் மட்டுமே பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கான ஒரே வழி என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை கட்டியெழுப்புவதற்கு மனித வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதே முக்கிய நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகள் மனிதவளத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வேகமாக வளர்ந்து வரும், அதிக போட்டித்தன்மை கொண்ட, தொழில்நுட்ப அடிப்படையிலான பொருளாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் என்பனவே இலங்கையின் எதிர்கால வேலைத்திட்டம் என்றார். (ம-7)

## தமிழர்கள்...

முதல் பெண் மாவீரர் 2ம் லெப்டினன்ட் மாலதியின் 36 வது ஆண்டு வணக்க நிகழ்வு நேற்று கிளிநொச்சி தருமபுரத்தில் இலங்கை தமிழரசு கட்சியினுடைய ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு நினைவு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 36 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்துடன் போராடி மாலதி அவர்கள் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசு போர் தொடுத்து பல அழிவுகளை ஏற்படுத்தியது. ஆனாலும் இன்றும் எங்களுக்கான தீர்வை பெற்றுத்தரும் என்பதில் நாங்கள் இந்தியாவை வேண்டி நிற்கின்றோம். நாங்கள் கியூபாவிடமோ அல்லது ரஷ்யாவிடமோ சீனாவிடமோ தீர்வு பற்றி பேசவில்லை.

இந்தியாவினால் தான் எங்களுடைய தீர்வு பற்றி பேச முடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் தொடர்ந்தும் இருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17366)

076 825 7716 (ஆகாஸ்)

வேலையாட்கள் தேவை

Store Keeper
- கணனி அறிவுள்ளவர்கள்
- A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

பகுதிநேர வேலையாட்கள்
- கணக்குகள்/ இருப்புகள் பார்ப்பதற்கு கணனி அறிவுள்ளவர்கள் வேண்டும்.(4.30Pm-7.30pm)
- வேலை செய்பவர்களும், படித்துக் கொண்டிருப்பவர்களும் விரும்பத்தக்கது.

திருநெல்வேலியை அண்மித்த பகுதியிலிருப்பவர்கள் விரும்பத்தக்கது

077 009 0189

(17410)

TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A/L 2023 DAY CLASS
(இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)

- திகதி - 13.10.2023 (வெள்ளிக்கிழமை)
- நேரம் - மாலை 2.30

(C-7412)

தொடர்புகளுக்கு - 077 017 5346

வேலையாள் தேவை

இல.300 ஆடியபாதம் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்னும் முகவரியில் அமைந்துள்ள குளிர்பானக் கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை.

வயது : 20 - 30 வரை
பால் : ஆண்

(C-7410)

077 292 8623
077 937 7073

பணிப் பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடொன்றிற்கு 03,05 வயதான இரு பிள்ளைகளை பார்ப்பதற்கு 35-55 வயதிற்குட்பட்ட தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை.

075 498 5400
077 937 0000
075 988 1000

(17411)

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 04 - 1953



இறப்பு 10 - 10 - 2023

### சபாரத்தினம் பாலகிருஷ்னன் (கிளி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பாலகிருஷ்னன்(கிளி) அவர்கள் 10.10.2023 நேற்று செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - சரஸ்வதி தம்பதியினரின் இழைய புதல்வனும் காலஞ்சென்ற தங்கரத்தினம் - ருக்குமணி தம்பதியினரின் மருமகனும் அமரர்களான சுப்பிரமணியம், காசிநாதன் ஆகியோரின் சகோதரரும் சுசிலாவின் அன்புக் கணவரும் சர்மிலா, மயூரன்(சுவிஸ்), டினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் விணோத்பாபுஜி(இ.போ.ச உத்தியோகத்தர்), சர்மிலி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனோஜ், சஞ்ஜை, மிந்துஜா, அக்ஷை, அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.10.2023 நாளை வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துக்கிருஷ்னர் வீதி,
சுன்னாகம்.

(17412)

தகவல் :
குடும்பத்தினர்
077 112 9340

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023 (C-7409)
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699882 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242
யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550870 | 0764550673 | பருத்தித்துறை 0768226230 | 0776697960 | கொடிகாமம் 0764550675
மானிப்பாய் 0768226238 | 0764550671 | 0777718322 | சங்கானை 0777726322 | 0743900353 | 0777720322
0764550674
V2 Travels 0768226236

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.

(17390)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE
0777-068-777 (C-7409)
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கருவாட்டு கடை ஒன்றிற்கு சிங்களத்தில் உரையாடி வியாபாரத்தை மேற்கொள்ளக்கூடிய சகல வேலைகளும் செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.

077 222 8312

(17409)

விசா விண்ணப்பம்

கனடா | பிரான்ஸ் | லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

குறிப்பு - இந்தியா, கனடா நாடுகளுக்கிடையேயான பனிப் போர் காரணமாக இலங்கைப் பிரஜைகளுக்கே வேலைவாய்ப்பு அதிகம்

ருமேனியா,சேர்பியா, கனடா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.

கனடா நாட்டிற்கு ஸ்பொன்சர் (Sponsor) விசா பெற்றுத் தரப்படும்

தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

NSA Group of Company (Pvt) Ltd.
197, Main Street, Jaffna.

077 266 6429, 021 221 0599, 077 877 4838

குறிப்பிட்ட விசாக்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.

(17413)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org